JET13-1-1-TA

# உங்கள் பாடுகளில் தேவனுடைய உதவி

# - நிகழ்ச்சி 1

**அறிவிப்பாளர்:**...இன்று, ஜான் அன்கர்பர்க் -ன் நிகழ்ச்சி

**டாக்டர் மைக்கேல் எஸ்லே:**...எல்லொரும் செல்கின்ற சில இடங்கள் உள்ளன, ஜான், அங்கெ எல்லா பிரச்சனைகளும் தீரும். நீங்கள் தேவனின் பிரசன்னத்தில் தனிமையில் இருப்பீர்கள். என் மனதில் வேதனை உள்ளது. சின்டியால் எனக்கு உதவ முடியாது, மருந்துகள் எனக்கு உதவாது. பரவாயில்லை, நான் இருப்பது என்னவோ தனிமையில் தான், தேவனே நான் கவலையோடுள்ளேன். உமது உதவி எனக்கு தேவை.

**அறிவிப்பாளர்:**...உங்க மருத்துவரிடமிருந்து சோகமான செய்தி வந்தவுடனேயே, தெவனால் உங்களுக்கு எப்படி உதவ முடியும்? நீங்கள் வாழ்நாள் முழுவதும் வேதனையோடு இருப்பதை எப்போது உணர்ந்துகொள்வீர்கள், அந்த இக்கட்டான சூழ்நிலையில் நாள்தோறும் உங்களுக்கு எப்படி தேவன் உதவ முடியும்? அல்லது, உங்களது முடிவு உங்களுக்கு தெரியும் நெரத்தில், அதைத் தெரிந்து கொண்டு தேவன் உங்களுக்கு எப்படி உதவ முடியும்?

**ஜோனி எரிக்சன் டாடா**:..தேவன் எனக்கு எப்போதும் உதவியதை நினைத்து பார்க்க முற்படுவேன், அது எனது வலியை போக்குகிறது, மாற்றியுள்ளது, மனதை திடப்படுத்தி ஆறுதல் அளித்துள்ளது, நிம்மதியை தந்து எனக்கு ஆறுதலான நீண்டநெடிய சுகத்தை வழங்கியுள்ளது, அதுவே உண்மை.

**அறிவிப்பாளர்:...**இன்று எனது விருந்தினர்களாக, னுச. ஆiஉhயநட நுயளடநலஇ Pசநளனைநவெ நுஅநசவைரள அவர் ஆழழனல டீiடிடந நிறுவனத்தை சார்ந்தவர், பிரென்ட்வுட், பைபிள் சபையை சார்ந்த மூத்த போதகர், டிடன்னீசீ: மற்றும் ஜோனி எரிக்சன் டாடா, ஜோனி மற்றும் நண்பர்களின் தலைவர், மாற்றுத்திரணாளிகளுக்கான சர்வதேச ஊழியங்கள், இந்த நண்பர்களும் உடன் உள்ளனர். நீங்கள் வேதனையோடு இருக்கும்போது தேவன் உதவுவதைப் பற்றி அவர்கள் சொல்வதைக் கேளுங்கள்.

*****

**டாக்டர். ஜான் அன்கெர்பெர்க்:...**எங்கள் நிகழ்ச்சிக்கு நல்வரவு. இன்று உங்களுக்கு ஒரு மகத்தான நாள். னுச. ஆiஉhயநட நுயளடநல யனெ துழni நுயசநஉமளழn வுயனய உடன் பேச இருக்கிறோம். நாம் எதிர்கொள்ளக்கூடிய மூன்று விஷயங்களைப் பற்றி பேசப் போகிறோம். அதில் ஒன்று, நாம் பெறக்கூடிய துயரமான செய்தியாகும், அதைப்பற்றி உங்கள் டாக்டர் விளக்குவார், அது ஏன் தெரியமா? உங்களுக்கு

புற்றுநோயோ, வேறு வியாதியோ, கண்பார்வை இல்லாமையோ இருக்கலாம். அல்லது ஒரு விபத்தின் காரணமாக உங்கள் உடல் ஊனமாக இருக்கலாம். அல்லது உங்கள் கழுத்து முறிந்து நீங்கள் வாழ்நாள் முழுவதும் வீல்சேரில் வரக்கூடிய நிலை ஏற்பட்டு இருக்கலாம். மைகடகேல், உங்களுக்கு இதுபற்றிய அனுபவம் உள்ளது, நீங்கள்நாடு முழுவதும் சுற்றி வந்திருக்கீறீர்கள். நீங்கள் மூடி வேதாகம நிறுவனத்தின் தலைவராகவும் உள்ளீர்கள், அந்த நிறுவனத்தில் ஆயிரக்கணக்கான குழந்தைகள் உள்ளனர். நீங்கள் இங்கே இருக்கிறீர்கள், இது பற்றிய வேதனையை நீங்கள் உணர்ந்துள்ளீர்கள், அந்த ஒரு சூழ்நிலையில் உங்களுக்கு துக்கமான செய்தி வந்தது, என்ன நடந்ததென்று சொல்லுங்கள்.

**மைக்கேல் எஸ்லே:**...2001ல் இருந்து இதைப் பற்றி நாங்கள் அறிந்துள்ளோம் ஜான், பலவிதமான கொடிய நோய்களைக் கண்டுள்ளோம். 2008 வரையில் இரண்டு அறுவை சிகிச்சையை நாங்கள் செய்துள்Nளும். அது ஒரு மறக்க முடியாத காலம், அப்போது வார்;வில் மாறுதல் தேவை என்பதை உணர்ந்தோம். இல்லினாய்சில் இருந்த ஒரு பெரிய மருத்துவர் சொன்னார், டாக்டர் எஸ்லே, உங்கள் வாழ்வில் மாறுதல் தேவை, இல்லையேல் நீங்கள் பெரும் பாதிப்படைவீர்கள், என்றார். அது ஒரு கடினமான முடிவு அல்ல. நல்ல முடிவு என்று நான் மக்களிடம் சொன்னேன். எனவே, உங்கள் வருங்காலத்தை நீங்கள் தான் முடிவு செய்ய வேண்டும் என்பதை உறுதியாக சொன்னேன்.

**ஆன்கர்பெர்க்:**..அவர்கள் உங்களுக்கு என்ன செய்தார்கள், மைக்கேல்?

**மைக்கேல் எஸ்லே:**...என் கழுத்தை சுற்றியுள்ள பகுதியில் ஒரு பெரிய அறுவை சிகிச்சை நடந்தது, அதில் பல்வேறு பாதிப்புகள் எனக்கு உள்;ர இருந்தன. அந்த சிகிச்சை பல கட்டங்களாக நடந்தது. என் கழுத்தை சுற்றியும் டைடானியம் ராடை பொருத்தினார்கள், அது ஒரு மறக்க முடியாத அனுபவம். ஆந்த அனுபவம் இப்போதும் என் நினைவில் உள்ளது. என் கழுத்துப் பகுதியில் பல்வேறு ஊஉசநற இணைப்புகள் உள்ளன. அந்த வியாதியின் காரணமாகவும், அந்த சிகிச்சையின் விளைவினாலும், நாள் முழுவதும் நான் வேதனையோடு உள்ளேன்.

**ஆன்கர்பெர்க்:**..நீங்கள் குணம் பெறுவீர்கள் என்று சொன்னது என் நினைவில் உள்ளது. மைக்கேல், நீங்கள் மறுவாழ்வு பெறுவீர்கள் என்று நினைத்து கூட பார்க்காமல் இருந்தீர்கள் அல்லவா?

**மைக்கேல் எஸ்லே:**...உண்மை.

**ஆன்கர்பெர்க்:**..சரிஇ உங்கள் மனதில் என்னதான் நினைத்தீர்கள்?

**மைக்கேல் எஸ்லே:**...சநீங்கள் அறிவீர்கள், நான் தேவனின் வார்த்தையில் வாழ்கிறேன், எனது நம்பிக்கை முழுவதும் வார்த்தையில் உள்ளது. மக்கள் நமக்கு உதவுவார்கள், நம்பிக்கை தருவார்கள், ஆனால் நான் நம்புவது வேதவசனத்தைதான்! சுங்கீதக்காரன் சங்கீதம் 40ல் அதைப் பற்றி கூறுகிறான். அவன்

செய்தது மகத்தான காரியம், என் கடந்த காலத்தை நினைக்கிறேன், தேவனின் மகிமையை நான் உணர்கிறேன். சங்கீதம் 40ல் இதுபோன்ற பல விஷயங்கள் உள்ளன. ஆனால் நான் தேவனுக்காக பொறுமையோடு இருந்தேன். எனக்கு காத்திருக்க பிடிக்காது. அதை அடியோடு வெறுப்பென். அது என்னால் தாங்க முடியாத ஒன்று. எபிரேயர் அதுபற்றி சொல்கிறது. அது இரண்டு வார்த்தைகள். அதாவது நான் காத்திருக்கிறேன், நான் காத்திருக்கிறேன். நம்மில் பலருக்கு அந்த சூழ்நிலை ஏற்பட்டு இருக்கலாம், அது ஒரு சோகமான செய்தி, இனம் புரியாத ஒரு அனுபவம், நீங்கள் முதலில் அறிய வேண்டியது பொறுமையாக இருப்பதை தான். எபிரேயர் சொன்னது, நான் காத்திருந்தேன் நான் காத்திருந்தேன். நாமும் சொல்வோம், நான் காத்திருந்தேன் நான் காத்திருந்தேன். என்று சொல்வோம். பிறகு அவர் கூறினார், இது தேவனின் செயல் என்று, அதுவே உண்மை! எனவே, பிரச்சனையோடும் வலியோடும் கடினத்தோடும் உள்ளவர்கள், தேவனுக்காக காத்திருங்கள். பிறகு சங்கீதம் சொல்கிறது, நான் திரும்பி பார்த்தேன், அவர் செவியால் கேட்டார் என்று. அவர் நமக்காக அவரது செவியை சாய்க்கிறார். அவர் சொன்னார், அவர் எனக்காக செவி சாய்த்தார், என் அழுகையை கேட்டார்." என்று. இது நமக்கு புரியாது, தேவன் நமது ஜெபங்களைக் கேட்கிறார். அது மட்டும் நமது சூழ்நிலையை மாற்றாது. சுங்கீதம் 116 நமக்கு சொல்கிறது, என் ஜெபத்தை கேட்பதால் தேவனை நேசிக்கிறேன் என்று. எனவே நமக்கு செவி சாய்ப்பதால் தேவனை நாம் நேசிப்போம்.

அங்குதான் நமக்கு நம்பிக்கை தேவை. அவர் சொல்கிறார், அவர் குழியிலிருந்து என்னை மீட்டார் - என்று, பிறகு அவர் பழைய சம்பவத்தை நினைக்கிறார். எனவே, தேவன் என்னை மீட்டது, இன்று கூட என் நினைவில் உள்ளது. பிறகு அவர் சொல்கிறார், என்னை கல்லில் அமர்த்தினார் என்று, எனவே நாம் துயரத்தில் இருந்தாலும், சகதியில் மாட்டிக்கொண்டாலும், நமக்கு தேவையானது பொறுடை, தேவன் நம்மை உயர்த்திவைப்பார் என்பது உறுதி. அது வெறும் எழுத்தல்ல, ஆவிக்குரியது ஆகும். ஆவிக்குரிய நமது வாழ்வில் அது சம்பவிக்கும், பிறகு அவர் சொல்கிறார், என் வாயில் அவர் புதிய சங்கீதம் வைத்தார் என்று. இதைப்பற்றி நாம் பேசினோம், ஜோனியின் கதையைக் கேட்போம், அது ஒரு மாறுதலான விஷயமாகும். எனவே நீங்கள் துயரத்திலும், வலியிலும் இருக்கும்போது, அதற்கு ஒரு நாள் விடிவுகாலம் வந்தே தீரும். வாழ்வில் ஒருநாள் சந்தோஷம் வரும். அவர் அதைப்பற்றி மேலும் கூறுகிறார், தேவனிடம் விசுவாசம் வைத்த நபரை, அவர் ஆசீர்வதிக்க தவிறியதில்லை என்று. எனவே இதில் நாம் முழுமை பெறுவோம். துயரம் வுரும்போது, துயர செய்தி வரும்போது, பொறுமையை காப்போம். காத்திருப்போம். கடந்த காலத்தில் நம் வாழ்வில் அவர் உதவியதை நாம் நினைப்போம். இருந்த இடத்தை நாம் எண்ணுவோம். அவர் நம்மை உயர்த்தினார். தேவனை நாம் விசுவாசிப்போம். அது ஒரு நீண்ட கால காத்திருப்பு ஆகும். ஆனால் ஒருநாள் என் இருதயத்தில் மகிழ்ச்சி கூடும் என்பது உறுதி, அதைப் பெறுகின்ற ஆணோ, பெண்னோ, நிச்சயமாக ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்.

**ஆன்கர்பெர்க்:**..நீங்கள் உங்களை அறுவை சிகிச்சைக்காக தயார் படுத்திக்டிகொண்டு கீழே சென்றீர்கள். அது குறித்து பேசுங்கள்.

**மைக்கேல் எஸ்லே:**...அந்நியர்களுடன் நான் இருந்தேன், அவர்களை பார்க்க முடியவில்லை, அவர்கள் முகமூடி அணிந்திருந்தார்கள். அவர்கள் தலை மூடப்பட்டிருந்தது. அவர்கள் அந்த பகுதிக்கு என்னை வீல்செர்ல அழைத்துச் சென்றார்கள், அங்கே, வித்தியாசமான காட்சிகள்,விளக்குகள் இருந்தன. அந்த நிலை வாழ்வா சாவா என்பதாகும். எல்லாவற்றையும் விட்டு நான் வந்தேன் என் பிள்ளைகளுக்கு குட்பாய் சொன்னேன். நூன் குழந்தைகளுக்கு கடிதம் எழுதினேன், என் மனைவிக்கு கடிதம் எழுதினேன். என் நண்பர்களுக்கு கடிதம் எழுதினேன். அது கடைசி பிரசங்கம். அதை எல்லாம் செய்துவிட்டு, எனது ஆடைகளை கைவிட்டேன், எனது நகைகளையும் கைவிட்டேன். என்னை ஒரு அறைக்கு அழைத்துச் சென்றனர். அந்நியர்கள் ஒரு மேசையில் என்னை கிடத்தினார்கள், அந்த சூழ்நிலையில் என்ன நடக்கும் என்றே நான் அறியாமல் இருந்தேன்.

**ஆன்கர்பெர்க்:**...அந்த பகுதிக்கு நீங்கள் சென்ற போது தேவன் உங்களுக்காக என்ன செய்தார்?

**மைக்கேல் எஸ்லே:**...வாழ்க்கையில் நடக்கும் எல்லாமே ஒரு அர்தத்தோடு நடப்பதில்லை. அதில் மூன்று விஷயங்கள் உள்ளன. நாம் உள்ளோம் வேதனை உள்ளது, தேவன் இருக்கிறார். மருத்துவர்கள்

முடிந்தவரை நன்மையை செய்வார்கள். ஆமாம், அதற்காக அவர்கள் பயிற்சி பெற்றுள்ளார்கள். அவர்களை விசுவாசியுங்கள். அதுதான் மனிதநேயம். நீங்கள் எழுவதும் எழாமல் இருப்பதும் தேவனின் சித்தம். அது தேவனின் ஆணையாகும்.

**ஆன்கர்பெர்க்:..**சரி, இதைப்பற்றி அறிந்துள்ள ஒருவர் என்தாயை போன்றவர், அவரிடம் பேசுங்கள். நீங்கள் மரணத்தை எதிர்கொள்கிறீர்கள், அது சரியோ தவறோ, அங்கு நீண்ட காலம் நீங்கள் வாழலாம். ஆனால் உங்கள் வாழ்வில் பெரிய மாறுதல் உள்ளது. இதைக் கேட்பவர்களுக்கு தேவனுடைய வார்த்தையை பற்றி உங்கள் கருத்து என்ன?

**மைக்கேல் எஸ்லே:..**மாற்றத்தை எதிர்கொள்வது மிகவும் கடினம். அதைக் குறைக்கவும் இயலாது. ஏப்போதும் பெரிய முடிவுகள் கடனமாகும். ஆனால் நீங்கள் செய்யப்போவது என்ன? நீங்கள் காத்திருக்க அறியவேண்டும். நான் காத்திருப்பதுபோல. தேவனிடம் நான் பொறுமையாக உள்ளேன். எனது கவலை, பயம், மன அழுத்தம், அதைரியம் எல்லாவற்றையும் அவரிடம் ஓதுக்கிவிட்டேன், அதாவது, என்னால் முடிந்தவரை. தேவனே உமது உதவி தேவை. கடந்த காலங்களில் எனக்கு நீர் உதவினீர். ஆதைப் பற்றியுள்ளேன். தேவனே, மறுபடியும் என்னை நீர் உயர்த்த முற்படலாம். அது நடைபெறாவிட்டாலும் உமது விசுவாசத்தை நான் அறிவேன். நீர் நல்ல தேவன் என்பதை நான் அறிவேன். ஆனால் பிரச்சனைகளையும்,

சோதனைகளையும் எதிர்கொள்வது நம் எல்லோருக்கும் கடினமானது ஆகும். மருத்துவம்,அவசர உதவி, சுற்றம், மக்கள் ஆகியோரை நாடி நாம் உள்ளோம். தேவனிடம் அதை யாரும் வற்புறுத்த முடியாது. ஆந்த வேதனையான சூழ்நிலையில் நான் தேவனோடு தனிமையில் இருந்தேன், அவர்தான் அதை தீர்க்க வல்லவர். எனவே அவரிடம் நமது பிரச்சனையை விட்டுவிடுவோம்.

**ஆன்கர்பெர்க்:..**துனிமையில் இருப்பது பற்றி ஒரு வசனம் சொன்னீர்கள். அது வசனம் 16 என்று நினைக்கிறேன். இந்த வசனத்தை நீங்கள் கட்டமிட்டமு ஏன் என்று சொல்லுங்கள்.

**மைக்கேல் எஸ்லே:...**நீங்கள் சொல்வது சங்கீதம் 25 16, அதில் சங்கீதக்காரன் சொல்வது இதுதான், என்மெல் நோக்கமாகி, எனக்கு இரங்கும். நான் தனித்தவனும், சிறுமைப்படுத்தப்பட்டவனுமாயிருக்கிறேன்." சில இடங்களில் எல்லோரும் என்று கூறுகிறார்கள். ஜான், எல்லோரும் நம்மை கைவிட்டுப் போனாலும், நீங்கள் தேவனோடு தனிமையில் உள்ளீர்கள், அதுதான் ஒப்புதல் ஆகும். ஏன்னோடு வேதனை உள்ளது, அது கழனமானது. சின்ழ எனக்கு உதவலாம், வேறு யாரும் அதில் உதவ முடியாது. மருத்தும் எனக்கு உதவாது. பரவாயில்லை, நான் சொல்லுவேன், தனியாக உள்ளேன் தேவனே, பாதிப்போடு உள்ளேன். உமது உதவி எனக்கு தேவை என்பேன்.

**ஆன்கர்பெர்க்:**..அது அருமையானது மைக்கேல். இன்னும் சிறிது நேரத்தில் மீண்டும் நாம் வருவோம். நாம் ஜோனி எரிக்சன் டாடா உடன் பேசப்போகிறோம். அவரது வாழ்நாளில் இதுபோன்ற ஏராளமான துயர செய்திகளை அவர் கேட்டுள்ளார். அதை மீண்டும், மீண்டும் கேட்பதால், அது எல்லோருக்கும் நலம் தருமா என்று அவரிடம் கேட்போம். அப்போது அவர் எதைப் பற்றியிருந்தார்? சிறிது நேரத்தில் நாங்கள் வந்தபிறகு ஜோனி எரிக்சன் டாடாவுடன் பேச உள்ளோம். எங்களோடு காத்திருங்கள்.

*****

**ஆன்கர்பெர்க்:**..நாங்கள் வந்துவிட்டோம். நாங்கள் பேசுவது னுச. ஆiஉhயநட நுயளடநல யனெ துழni நுயசநஉமளழn வுயனய உடன். நண்பர்களே, இந்த கூட்டத்தில் உள்ள ஜோனியிடம் நாம் பேசுகிறோம், அவருக்கு இதிலே நிறைய அனுபவங்கள் உண்டு. புற்றுநோயால் அவதிப்படுகிறவர்கள் டாக்டரின் ஆலோசனை பெற்றிருக்கலாம், சிலருக்கு விபத்து ஏற்பட்டு ஊனமாகி இருக்கலாம், சிலர் குருடர்களாகலோ வாழ்க்கையில் வேறுசில பாதிப்புகளையோ பெற்று இருக்கலாம், அவர்கள் எல்லோரும் பிரச்சனையில் உள்ளார்கள். அவர்களுக்கு தேவை ஆறுதலான வார்த்தை, அவர்களுக்கு தேவை நம்பிக்கையான வார்த்தை. அதற்கு ரேம் ஆகலாம், அதாவது பல்லேறு நேரங்களில் இதுபோன்ற துயரச் செய்திகளை நீங்கள் டே;டிருக்கலாம். முதலாவது, ஒரு விஷயத்தை நாம் பார்ப்போம், டாக்டர் இவ்வாறு

சொன்னால் என்ன செய்வது என்பதை நாம் சிந்தித்துகூட பார்க்க முடியாது. ஜோனி, உங்கள் கழுத்தில் முறிவு ஏற்பட்டுள்ளதால், உங்களால் நடக்க இயலாது, உங்கள் கைகளைக் கூட பயன்படுத்த முடியாது.” இப்போது கேட்கிறேன், இதுபோன்ற ஒரு சூழ்நிலையில் மக்களுக்கு நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

ஜோனி எரிக்சன் டாடா:..என்னால் நடக்க முடியாது. ஏன் கைகளை நான் பயன்படுத்த முடியாது என்று மருத்துவர்கள் என்னிடம் சொன்ன போது, என்ன செய்வதென்றே எனக்கு தெரியவில்லை. அது எனது மூளையில் எதிரொளித்தது.” அப்போது எனக்கு இருந்த ஒரே ஆறுதலான விஷயம், நான் நலம் பெற எனக்கு வந்த கடிதங்கள், பரிசுகள், முயல்பொம்மைகள், என்னை மருத்துவமனையில் நேரில் வந்து பார்த்த நண்பர்கள், அதுபோன்ற பலவிஷயங்கள், எனக்கு நடந்த மருத்துவமனையிலிருந்து வெளியெறி, என் பண்ணை வீட்டுக்கு வந்தபோதுதான், உண்மை என்னவென்று தெரிந்தது. ஒரு வீல் சேர்ல அமர்ந்தபடி ஜன்னல் வழியாக நான் இயற்கையை ரசித்தேன். அப்போது, என் சனோதரிகள் குதிரை மீது ஏறி சவாரி செய்வதைப் பார்த்தேன். அது அமைதி தந்தது. தனிமையில் நான் இருந்தேன். துக்க செய்திகளை  மறப்பதற்கு அந்த சூழ்நிலை எனக்கு உதவியாக இருந்தது.

ஜன்னல் வழியாக இயற்கை காட்சிகளை தனிமையில் ரசிப்பதில், பல நாட்களை நான் கழித்தேன். அப்போது கடந்தகால நிகழ்வுகள் எல்லாம்

என் நினைவில் வந்தது, அதை நான் இப்போது இழந்துள்ளேன். நான் தாவிகுதிக்காவிட்டால் என்ன? நான் கடற்கரைக்கு போகாவிட்டால் என்ன? அப்படிபட்ட எண்ணங்களின் நடுவே என்னில் உற்சாகம் வரக்கூடிய ஒரு புதிய சூழ்நிலையை எ;னில் உருவானது. என்னை மருத்துவமனையில் சந்திக்க வந்த ஒரு நண்பர், பைபிளை திறந்ததை நான் நினைக்கிறேன். அதை அநேகம் பேர் செய்தனர். 1 சாமுவேலை அவர் படித்தார். அவர் சொன்னார், ஜோனி, ஒரு நாள் வரும் அது எப்போது என்று எனக்கு தெரியாது. ஊங்களது வீல்சேரை நீங்கள் பார்க்கப்போகிறீர்கள். அதை உங்கள் எபினேசர் என்று அழைக்கப்போகிறீர்கள் என்றார். அதென்ன சொல்லுங்கள் என்றேன். பிறகு அவர் 1 சாமுவேலை பழத்தார். அந்த தீர்க்கதரிசி, பெலிஸ்தருக்கு தேவன் காட்ழய பாதையை பற்றி கூறியுள்ளார். பின்னர், சாமுவேல் கற்களை ஒரு நினைவு சின்னமாக எழுப்பினார். அதனை எபினேசர் என்று அழைத்தார் என்று அவர் சொன்னார். இதுதான் தேவன் நமக்கு உதவியது என்றார்.

அந்த நேரத்தில் மைக்கேல் என்னிடம், பலமுறை சொன்னது என் மனதில் தோன்றியது. ஜோனி அதைப்பற்றி நீங்கள் அடிக்கடி சொல்வீர்கள்.எப்போதும் தேவன் நம்மோடு இருப்பதை நாம் உணர்ந்தால், அவர் நம்மோடு இருப்பார் என்று ஜன்னல் ஓரமாக அமர்ந்தபடி நான் இயற்கையை ரசிக்கும் போது எனக்கு ஒரு நினைவு சின்னமாக வீல்சேர் என்படி வரப்போகிறது என்று அதிசயப்படுவேன்.

சுpறய அளவிலும் மிகப்பெரிய அளவிலும் கடந்த காலங்களில் தேவன் எனக்கு உதவியதை எப்போதும் நான் நினைப்பேன்.
குழம்பிப்போயிருந்த என் மனதிற்கு அது மிகவும் ஆறுதலாக இருந்தது. நான் வாழுகின்ற உண்மையான சூழ்நிலை அப்போது எனக்கு புரிந்து. நான் சிலுவையை நாடினேன். அப்படித்தான் கடந்த காலத்தில் தேவன் எனக்கு உதவினார். நரகத்திலிருந்து என்னை அவர் காப்பாற்றினார். என்னை அவர் பாதுககாத்தார். எனது இளம் வயதில் அவர்  மீது என் விசுவாசத்தை நான் வைத்தேன், அவ்வளவுதான் நான் செய்தேன். அதுவே போதுமானது. சிலுவையின் மூலம் தேவன் எனக்கு உதவினாh. சிலுவையை தினமும் நான் நாடுவதன் மூலம் மகத்தான வழியில் தேவன் எனக்கு உதவப்போகிறார் என்று நினைத்தேன். அது எப்படியென்று தெரியாது. அது எப்போது நடக்குமென்றும் தெரியாது. நாளை எப்படியிருக்கும் என்று எனக்கு தெரியாது. ஆனால், அதுதான் எனது தொடக்கம்.

**ஆன்கர்பெர்க்:..**உங்கள் கால்களையும் கைகளையும் நீட்ட முடியாமல், ஏன் உங்கள் முகத்தை கூட அரிக்க முடியாமல் நீங்கள் பட்ட துன்பத்தை எல்லாம் நன்றாக விளக்கினீர்கள். அது எனக்கு நெகிழச்சியாக உள்ளது. அது அச்சமான மனோ நிலையாகும். சிலுவையில் இயேசுவை நீங்கள் எப்பi நினைத்தீர்கள், எபிரேயரைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள். அவர் ஒரு பிரதான ஆசாரியர் -

அவர் பிறருக்கு இறங்குவார், நமது மனநிலையை பற்றி அவர் அழுத்தத்தோடு கூறுவார் என்றா? அதைப்பற்றி சொல்லுங்கள்.

ஜோனி எரிக்சன் டாடா:..ஒன்றில் மூன்று ஐக்கியங்களான பிதா குமாரன் பரிசுத்த ஆவி ஆகியோரின் மீது நான் மிகுந்த விசுவாசம் வைத்துள்ளேன். ஆனால் தேவனின் இராஜ்யம் மிகவும் மகத்தானது, முதலில் அதைக் கண்டு நான் பயந்தேன், என் பக்கவாத நோய் நிரந்தரமானது. தேவன் என்னை விட்டுவிடுவாரோ என்றும் என் வாழ்க்கை முழுவதும் இப்படியே இருக்குமா, என்றும் எண்ணினேன். முரணம் என்னை பயமுறுத்தியுது. ஒரு விஷயம் இது மதநூல்படி சரியாக இருக்காது என்று நான் அறிவேன். அதைபற்றி மைக்கேல் பின்னர் என்னிடம் சொன்னார்,ஆனால் எனது இருதயத்தையோ தலையையோ கரத்தையோ தேவனின் ராஜ்யத்தின் முன்பு அப்போது நான் மூடிவைக்க விரும்பவில்லை. இருந்தாலும் அதை நான் செய்தேன். ஆனால், அந்த நேரத்தில் அது மிகவும், அச்சத்தை உண்டாக்கியது. ஏதிர்காலத்தை பற்றிய கவலை எனக்கு அதிகம் இருந்தது. நான் இயேசுவிடம் ஓடினேன், இயேசுவே நீர் புரிந்துகொள்வீர். எனது நிலைமை பற்றி உமக்கு தெரியும், என் கவலையை நீர் ஏற்பீர். ஆப்போது இயேசு சிலுவையில் அறையப்பட்டதை நான் நினைத்துப் பார்த்தேன். அது என் மனதில் பதிந்தது, அது எனக்கு மிகுற்த ஆறுதலை தந்தது, சிலுவையில் கரங்களைக்கூட அசைக்கமுடியாது இருந்த என் ரட்சகருக்கு வலி

என்னவென்று தெரியும். ஆவர் சிலுவையில் ஆணிகளால் அடிக்கப்பட்டு, தன் அவயங்களை அசைக்கமுடியாத ஒரு நிலையில் இருந்தார். உடனே நான் வீல்சேரில் இருப்பதை நினைத்தேன், அதைப்பற்றி என் ரட்சகருக்கு புரியும்என்பது எனக்கு ஆறுதலாக இருந்தது. அதுபற்றி அவருக்கு புரிந்தோடு மட்டுமல்ல, அவர் தனது துயரத்தையும், மரணத்தையும் வென்று காட்ழனார். அதே போன்ற ஒரு மனவலிமையை எனக்கும் அவர் தருவார் என்று நம்பினேன். கடுகு அளவில் உள்ள ஒரு விதையைப் போன்ற ஒரு விசுவாசத்துடன் நான் போராடுகிறேன், ஆனால் நான் சரியான பாதையில் செல்வதற்கு அதுவே எனக்கு போதுமானதாகும்.

**ஆன்கர்பெர்க்:..**அது சரி மைக்கேல், இயேசு நமது பிரதான ஆசாரியராக இருக்கிறார் என்று எபிரேயர் 4 கூறுவதை நீங்கள் விளக்கிடுங்கள்.

**மைக்கேல் எஸ்லே:..**வுhனங்களின் வழியாய்ப் பரலோகத்திற்குப் போன தேவனுமாரனாகிய இயேசு என்னும் மகா பிரதான ஆசாரியர் நமக்கிருக்கிறபடியால், நாம் பண்ணின அறிக்கையை உறுதியாய்ப் பற்றிக்கொள்வோம்.” எபிரேயர் 4 15 நம்முடைய பலவீனங்களைக் குறித்த பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவற்றிலுமு; நம்மைப்போல சோதிக்கப்பட்டும் பாவமில்லாதவராயிருக்கிறார்.” அதிலிருந்து நமது சார்பாக, கிறிஸ்துவின் நிலையைப் பற்றி அறிந்துகொள்வோம். நாம்

அனுபவிக்கும் எல்லா வலியும், எல்லா ஏமாற்றங்களும், வாட்டங்களும், வினோதங்களும், அவர் அனுபவித்துள்ளார். எனவே நமது சார்பில் அவர் சமாதானம் செய்வார். நாம் முழுமை பெறாதவர்களாக இருந்தால், அந்த மகத்தான பிரதான ஆசாரியரைப் பற்றுவோம். நம்மைபற்றி எல்லாம் அறிந்த ஒருவர் உள்ளார். அவர் அந்த பாதையை கடந்து வந்துள்ளார், அதுதான் நமக்குள்ள தொடர்பு.என் சார்பில், என் இடத்தில் இருந்தபழயே பிரதான ஆசாரியரை நான் பற்றுவேன். நாம் துயரப்படும் எல்லாவற்றையும் அவர் அறிந்துள்ளார்.

**ஆன்கர்பெர்க்:..**என் தாயாருக்காக ஒரு நிகழ்ச்சி நடத்த நான் விரும்பினேன். ஆனால் அதை செய்யவில்லை. அது இன்னமும் என் மனதில் உள்ளது. அவரது வேதனை குறித்து நான் கலங்கியுள்ளேன். ஆனால் அங்கே தற்போது எனது நண்பர்கள் உள்ளனர். உங்களுக்கும் நண்பர்கள் உள்ளனர். மைக்கேலுக்கு பலரை தெரியும், இந்த உலகம் முழுவதிலும் துக்கமான செய்தியை கேட்ட மக்கள் பலர் உள்ளனர். அது நிரந்தரமாக அவர்கள் வாழ்வை மாற்றிவிடும். வுலி குறையக்கூடும்.ஏதோ ஒரு சூழ்நிலையில் அவர்களுக்கு வலியும், துயரமும் ஏற்படலாம்.. அப்படிபட்ட நபர்கள் அதை அறிய விரும்புகிறார்கள், அவர்களுகு;கு நீங்கள் சொல்ல விரும்புவது என்ன? அவர்களை உற்சாகப்படுத்துங்கள்.

ஜோனி எரிக்சன் டாடா:...அந்த மக்கள்  முதலில பெருமூச்சு விடவேண்டும். அது ஆழமான சுவாசம், அது பெருமூச்சு! உங்களது நண்பர்களேர்டு உங்கள் துயரங்களை பகிருங்கள், ஆனால் உங்கள் துயரம் பிறரது நட்பை விரும்பினாலும், அது உங்களை சீக்கிரம் கீழே தள்ளிவிடும். எனவே, நம்பிக்கை தரும் மக்களோடு இருங்கள். அவர்கள உங்களை ஊக்குவித்து, தேவ வார்த்தையை காட்டுவார்கள். பிறகு தேவனின் கிருபையில் சுவாசித்து, உங்கள் பயத்தை வெளிவிடுங்கள். தேவனின் கருணையில் சுவாசித்து, எதிர்காலம் பற்றிய உங்கள் பயத்தை விடுங்கள். வேதனையை கையாள்வது பற்றி மைக்கேல் ஒரு அருமையான விஷயம் சொன்னார். அவர் கூறியது இதுதான், அடுத்ததை பாருங்கள், எழுந்திருந்து அடுத்த காரியம் செய்யுங்கள். உங்கள் மருத்துவ அறிக்கையைவிட மோசமாக இருக்கும் மருத்துவ அறிக்கையை பாருங்கள். அவர்கள் அருகிலே இருக்கிறார்கள். உங்கள் மருத்துவமனையிலேயே உள்ளார்கள். உங்கள் பக்கத்து வீட்டிலும் இருக்கிறார்கள். உங்கள் திருச்சபையிலும் இருக்கிறார்கள். அவர்னேர்டு சேருங்கள், அவர்களுக்காக ஜெபியுங்கள் என்றார். இயேசு சிலுவையில் இருந்தபோதும், மரணப்படுக்கையில் இருந்த போதும், தன்னை சுற்றியிருக்கும் பிற மக்களை பற்றியே நினைத்தார். அவருக்கு மரணம் சம்பவிக்கும் நேரத்திலும், தாய் மீது அக்கறை காட்டினார், சிலுவையில் தனது காலடியில் இருந்த அருமையான நண்பனுக்கு ஆறுதல் கூறினார். கிறிஸ்துவிலும்,

கிறிஸ்துவில் மட்டும் நாம் விசுவாசம் வைக்காத வரை, நமக்கு நம்பி;க்கை இருக்காது. அவர் வாழ்ந்தார், மரித்தார், அடக்கமானார், தனது மரணத்தை முன்பே உறுதி செய்தார். பின்னர் அவர் உயிர்த்தெழுந்தார். அவர் புதியதொரு வாழ்வு பெற்று வந்தார், கிறிஸ்துவிலும், கிறிஸ்துவில் மட்டும் விசுவாசம் உள்ளவர்களின் இரட்சிப்பிற்கு அவர் அதனை நிச்சயம் வழங்குவார். நாம் செய்ய வேண்ழய ஒரு காரியத்தை செய்யாமல் இருக்கிறோம். தேவனின் கவனத்தை பெற நாம் என்ன செய்வது? சற்று மேன்மையாக இருந்து காரியம் செய்வது மட்டுமே கிறிஸ்துவின் கவனத்தை ஈர்க்காது. அதை அவரிடம் விடுவோம். எனவே நமக்காக நமது இருப்பிடத்தில் இருந்தபடியே அவர் நமக்கு செய்துள்ளதை விசுவாசிப்போம். நமக்கு அதே கிருபையை அவரால் தரமுடியும். உங்களது மருத்துவ சோதனைகளையும், பிறரது மருத்துவ சோதனைகளையும் ஒப்பிட்டு பார்க்கும்போது, அவர் கிருபை உங்களுக்கு ஆறுதல் தரும். அதுமுதல் சுகமளித்தல் தொடங்கும்.

**ஆன்கர்பெர்க்:..**அருமையான விளக்கம.; மைக்கேல், சிலர் இப்படியும் கூறுவார்கள், நீங்கள் இயேசுவை அறிந்திருப்பது போல இதுவரை நாங்கள் அவரை அறியவில்லை.” என்று, அவர்கள் இயேசுவை நெருக்கமாக அறிவது எப்படி? அவர்கள் பாவத்தை அவர் மன்னித்துள்ளார் என்று எப்படி அவர்கள அறிவது, அவர்கள் வாழ்வு

எப்படியிருந்தாலும் அதில் அவர் பிரவேசிப்பார் என்று அவர்கள் அறிவது எப்படி?

**மைக்கேல் எஸ்லே:**...ஏதொவொரு சூழ்நிலையில் நம் வாழ்வு தோல்வியடையும், மக்களும் நண்பர்களும், நடைபெறும் நிகழ்ச்சியும் நம் துரோகமும் சில நேரம் நம்மை ஏமாற்றக்கூடும். அவர் மீது நம்பிக்கையும், விசுவாசமும் நாம் வைத்தால், அவர் நமக்கு இலவச ஈவு தருவார், அந்த ஈவின் பெயர்தான் நித்திய ஜீவன். அவர் வழங்கும் மிக உயர்ந்த ஈவு அதுதான். நமது தேகங்கள் நாளுக்கு நாள் சிதைகின்றன. அவை அழிந்து வருகின்றன, அவை இயங்க முடியாமல் போகின்றன. அவரால் நாம் புதிய வாழ்வும், புதிய பிறவியும் பெறுவோம். ஆந்தப்பிறவி கிறிஸ்துவேர்டு என்றும் இருக்கும். ஜோனி கென்னுடன் நடனமாடும் போது, என் வலி நீங்கிவிடும், அது ஒரு புதிய பாதை, ஒரு புதிய ராஜ்யம், அதை கற்பனை செய்ய முடியாது. தேவன் நமக்கு நித்திய ஜீவனை வழங்கி, நம் பாவங்களை மன்னித்து, அவரோடு என்றும் தோழமை வழங்கும் போது, நாம் எதற்காக பாவமான, சுயநல வாழ்க்கையையும், ஏமாற்றத்தையும் மேற்கொள்ளவேண்டும்? அது விசுவாசம் ஆகாது. இயேசு கிறிஸ்துவை நீங்கள் விசுவாசிக்கிறீரா?

**ஆன்கர்பெர்க்:**..நண்பர்களே, உங்கள் வாழ்வில் இயேசு கிறிஸ்து இப்போதே வருவதற்காக நீங்கள் ஜெபிக்கலாம், இப்படி சொல்லுங்கள், என் விசுவாசம் முழுதும் உமக்கு தருகிறேன், தேவனின் முன்பாக

இருப்பதற்காக நீர் சிலுவையில் செய்தவை எல்லாம் இப்போது எனக்குத் தேவை. என் பாவத்தை நீர் கழுவிடும், அதற்காக உம்மை நான் விசுவாசிக்கப்போகிறேன். பிறகு என் வாழ்வில் நீர் வாரும், என்னை நீர் வலிமைபடுத்தும். இப்போது நான் வாழும் சூழ்நிலையில் எனக்கு நீர் உதவிடும்."

இந்த நிகழ்ச்சியில், சோகமான செய்தியை கேட்பது பற்றி நாம் பேசுகிறோம். அடுத்த வாரம், துயரப்படுபவர்களோடு நாம் பேச இருக்கிறோம். உங்களிடம் உள்ள துயரச் செய்தியோடு, வீட்டிலிருந்து வாருங்கள், அதற்கான நிகழ்ச்சி இது. நீங்கள் வலியோடு உள்ளீர்கள், அது உங்களில் தொடர்ந்து நடைபெறுவதாக தெரிகிறது. ஜோனி, 46 வருடங்களாக வீல் சேரில் இருந்துவருகிறார். ஐமக்கேல் நீண்ட நாள் துன்பத்தோடு இருந்துள்ளார். நாள்தோறும் துன்பப்பட்டு வலியோடு இருக்கும்போது தேவன் நமக்கு உதவுவார். அநேகம் பேர் உள்ளீர்கள். இப்போது நாம் பேச்சை முடிக்கும் நிலையில் உள்ளோம். ஏனென்றால் உங்களில் சிலர் முடிவை எதிர்பார்த்து உள்ளீர்கள்.

அடுத்த வாரம் நமது நிகழ்ச்சியில் மூன்று நபர்கள் இடம் பெறுவார்கள்.அவர்களின் நண்பர்கள் இங்கே வருவார்கள். அந்த நண்பர்கள் அவர்களைப் பற்றிய துயரமான செய்தியை கேட்கும்போது அவர்களைகவனிக்கவேண்டும், அதை அவர்கள் எப்படி கையாளவேண்டும்? எப்படி செயல்படவேண்டும்? இவ்வளவு ஆண்டுகளாக அவர்களை எப்படி கவனித்து வந்தார்கள், என்ன

நடந்தது? பாதுகாப்பவர்கள் அறியவேண்டியது என்ன? தேவனிடமிருந்து எப்படி அவர்கள் உதவி பெறுகிறார்கள், என்பதைப் பற்றியும், பிறகு பாதுகாப்பவர்கள் இறுதியான ஒரு முடிவுக்கு வருவார்கள். அந்த நிகழ்ச்சி தொடர் அதை விளக்கமாக கூறும்.அதில் நீங்கள் இணைவீர்கள் என்று நான் நம்புகிறேன். அது மிகவும் பயனுள்ளதாக உங்களுக்கு இருக்கும் என்று நான் நம்புகிறேன். எங்களோடு இருந்ததற்கு நன்றி, அடுத்த வாரம் நாம் சந்திப்போம்.

*****

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம்

செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2013 A.T.R.I.